## 100 ஆண்டுகள்… 50 நெல் ரகங்கள்… அசத்தும் ஆடுதுறை..!

10.07.2013





புதிய நெல் ரகங்களைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்வதிலும்… தரமான விதை நெல்லை உற்பத்தி செய்வதிலும், முதன்மையான இடம் வகிக்கிறது, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே ஆடுதுறையில் அமைந்துள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்.

### ஆண்டுக்கு 75 டன் விதை உற்பத்தி!

சுமார் நூறாண்டுகள் பழமை வாய்ந்தது இந்த நிலையம். 1912-ம் ஆண்டு மயிலாடுதுறை அருகே உள்ள மங்கைநல்லூரில் தொடங்கப்பட்டு, 1922-ம் ஆண்டு ஆடுதுறைக்கு மாற்றப்பட்டு, இங்கேயே தொடர்ந்து இயங்கி வருகிறது. தற்போது, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ், இயங்கி வரும் இந்நிலையத்தில், இதுவரை வெளியிடப்பட்ட பயிர் ரகங்களைப் பற்றிய விவரங்கள், கல்வெட்டுகளில் பொறித்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 160 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள, இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 50 ஏக்கர் நிலத்தில் விதை உற்பத்தி நடைபெறுகிறது. ஆண்டுக்கு சுமார் 75 டன் விதைநெல், 6 டன் விதை உளுந்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன என முன்னுரை கொடுத்த ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ஜெயராஜ், அங்கு பணியாற்றும் பல்வேறு துறை சார்ந்த பேராசிரியர்களை நமக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

### ஏ.டி.டீ.1 முதல் ஏ.டி.டீ-50 வரை!

விதை அறிவியல் தொழில்நுட்பத் துறையின் உதவிப் பேராசிரியர் ராஜா. “உயர் விளைச்சல் அளிக்கக் கூடிய நெல் ரகங்களை உருவாக்கி, விவசாயிகளிடம் பரவலாகக் கொண்டு சேர்ப்பது, இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையான நோக்கங்களில் ஒன்று. அதிக மகசூல் தரக்கூடியதும், பூச்சி மற்றும் பூஞ்சணத்தைத் தாக்குப் பிடிக்கக் கூடியதுமான இரண்டு நெல் ரகங்களின் தாய் விதைகளை ஒன்று சேர்த்து, புதிய நெல் ரகத்தை உருவாக்குவதுதான் அடிப்படைத் தொழில்நுட்பம்.

இங்கு முதன் முதலாக 1924-25ம் ஆண்டு ஏ.டி.டீ-1 (ஆடுதுறை-1) என்ற புதிய நெல் ரகம் உருவாக்கப்பட்டு, அறிமுகம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏ.டி.டீ-2, ஏ.டி.டீ-3, ஏ.டி.டீ4… என ஏ.டி.டீ.ஆர்.ஹெச்.-1 என்ற வீரிய ஒட்டுநெல்லும் எங்களது உருவாக்கம்தான். 1998-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஏ.டி.டீ-43, குறுகிய கால நெல் ரகம். சன்னரகமான இதன் மொத்த வயது 105-110 நாட்கள். ஹெக்டேருக்கு 5 ஆயிரத்து 500 கிலோ முதல், 5 ஆயிரத்து 900 கிலோ வரை மகசூல் கொடுக்கும். அதிசயப் பொன்னி, டீலக்ஸ் பொன்னி, கோடைப் பொன்னி என பல பெயர்களில் இந்த ரகம் அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் குறுகிய கால வயதுடைய ரகங்களில், இதுதான் 50% முதல் 60% வரை பயிரிடப்படுகிறது. 2001 –ஆம் ஆண்டு இங்கு உருவாக்கப்பட்ட ஏ.டி.டீ-45 ரக நெல், வறட்சி மற்றும் பூச்சி, நோய்த் தாக்குதல்களை சமாளித்து வளரக்கூடியது. ஹெக்டேருக்கு 5 ஆயிரத்து 700 கிலோ முதல், 6 ஆயிரம் கிலோ வரை மகசூல் கொடுக்கும். இது மித சன்னரகம். இதுபோன்ற இன்னும் பல ரகங்கள் விவசாயிகளின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன என்றார்.

**விதைகள் விற்பனைக்கு!**

உழவியல் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் பன்னீர் செல்வம், "நீண்ட கால வயதுடைய நெல் ரகங்களில் அதிசன்னமே இல்லாமல் இருந்தது. அந்தக் குறையை, 2012 –ம் ஆண்டு இங்கு உருவாக்கப்பட்ட ஏ.டி.டீ-50 நீக்கியது. 1,000 நெல்மணிகளின் மொத்த எடை, 15.9 கிராம்தான். இதுபோன்ற அரிசியை மக்கள் விரும்பி வாங்குவார்கள். அதனால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த ரகத்தின் மொத்த வயது 149 நாட்கள். ஹெக்டேருக்கு 5 ஆயிரத்து 945 கிலோ மகசூல் கிடைக்கும்.

நீண்டகால ரகங்களில் ஏ.டி.டீ40, ஏ.டி.டீ.44: மத்திய கால ரகங்களில் ஏ.டி.டீ-38, ஏ.டி.டீ-39, ஏ.டி.டீ46, ஏ.டி.டீ49, குறுகிய கால ரகங்களில் ஏ.டி.டீ36, ஏ.டி.டீ37, ஏ.டி.டீ42, ஏ.டி.டீ45, ஏ.டி.டீ47 போன்ற ரகங்கள் விவசாயிகளால் அதிகமாக விரும்பப்படுகின்றன. இங்கு தரமான முறையில் விதை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உருவாக்கப்பட்ட ரகங்கள் மட்டுமல்லாமல், பிற ஆராய்ச்சி நிலையங்களில் உருவாக்கப்பட்ட ரகங்களின் விதையும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

குறிப்பாக, சி.ஆர்-1009, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி ரகங்களின் விதைநெல் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. கருவிதையை மூலமாக வைத்து, வல்லுநர் விதையும், வல்லுநர் விதையை மூலமாக வைத்து, சான்று விதையும் உற்பத்தி செய்யப்படுகின்றது. கருவிதை நெல் ஆராய்ச்சி நிலையங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். விதைப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கு, வல்லுநர் விதை தேவைப்பட்டால், கோயம்புத்தூரில் இருக்கும் விதை மையத்தின் தனி அலுவலரிடம் முன்பதிவு செய்துவிட்டு, இங்கு வந்து வாங்கிக் கொள்ளலாம். ஆதார விதை, சான்று விதை வாங்க முன்பதிவு தேவையில்லை. நேரடியாக இங்கு வாங்கிக் கொள்ளலாம்.

விவசாயிகள் இங்கு கிடைக்கக் கூடிய சான்று விதையைப் பயன்படுத்தி சாகுபடி செய்தால், விளைச்சல் சிறப்பாக இருக்கும். இதன் மூலமாக, மூன்று முறை மறுசாகுபடி செய்யலாம் என்றார்.

**விவசாயிகளே வாருங்கள்!**

“விவசாயிகள், விதைச்சான்று அளிப்புத் துறையின் அனுமதியுடன், விதை விற்பனையில் ஈடுபடலாம். விதை உற்பத்தித் தொழில்நுட்பப் பயிற்சி. எங்கள் ஆராய்ச்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது. இங்கு, இரண்டு விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. விதைப் பண்ணை விவசாயிகள், இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு கிலோவுக்கு 50 பைசா மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தமிழகத்திலுள்ள மற்ற நெல் ஆராய்ச்சி நிலையங்கள், தேசிய மற்றும் பன்னாட்டு ஆராய்ச்சி நிலையங்களுடன் இணைந்து, புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சிகளில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, வறட்சி மற்றும் வெள்ளத்தைத் தாங்க கூடிய நெல் ரகங்களை உருவாக்கும் முயற்சிகள் தீவரமாக நடைபெற்று வருகின்றன என்றதோடு, விவசாயிகள், நெல் சாகுபடி தொடர்பான அனைத்துவிதமான ஆலோசனைகளுக்கும் எங்கள் ஆராய்ச்சி நிலையத்தை அணுகலாம் என்றார்.

**விதை விலை நிலவரம்**

சான்று விதை : சன்ன ரகம் ஒரு கிலோ 22 ரூபாய். மோட்டா ரகம் ஒரு கிலோ 19 ரூபாய். முளைப்புத்திறன் குறைந்தபட்சம் 80 சதவிகிதம் இருக்கும். இனத்தூய்மை 98 சதவிகிதமும், புறத்தூய்மை 98 சதவிகிதமும் இருக்கும்.
வல்லுநர் விதை: சன்ன ரகம் ஒரு கிலோ 40 ரூபாய். மோட்டா ரகம் 38 ரூபாய். இதன் முளைப்புத்திறன் 80 சதவிகிதமும், இனத் தூய்மை 100 சதவிகிதமும், புறத்தூய்மை 98 சதவிகிதமும் இருக்கும்
ஆதார விதை: சன்ன ரகம் ஒரு கிலோ 28 ரூபாய். மோட்டா ரகம் 24 ரூபாய். முளைப்புத் திறன் 80 சதவிகிதமும், இனத் தூய்மை 99 சதவிகிதமும் இருக்கும்.

**தொடர்புக்கு**
**0435-2472098, 0435-2472298, 0435-2473832 (அலுவலக எண்கள்)**
**உதவிப் பேராசிரியர்**
**ராஜா, செல்போன் : 97865-32644**
**முனைவர் பன்னீர் செல்வம், செல்போன்:94889 -45932**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.07.13** www.vikatan.com